# இடைக்காட்டுச் சித்தரின் இறை நெறி கோட்பாடு

**முனைவர் கா. சந்தானலெட்சுமி**

**இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர்**

**தமிழ்த்துறை,அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

**சாத்தூர்**

lakshmisanthana617@gmail.com, ORCID: 0009-0009-4031-9490

48

**ஆய்வுச்சுருக்கம்**

சித்தத்தை அடக்குபவர்கள், சித்தத்தை ஆள்பவர்கள் என்பதால் 'சித்தர்கள்' என பெயர் பெற்றனர். சித்தருக்கெல்லாம் சித்தராக சிவனாரே விளங்கியதை மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள சித்தர் சன்னதி தெளிவுபடுத்தும்.ஆன்மிகத்தோடு இணைந்த அறிவியலைத் தந்தவர்கள் கோடான கோடி சித்தர்களில் இடைக்காட்டுச் சித்தர் முக்கிய இடம் பெறுகிறார். இவர் நவக்கோள்களை நன்மை தரும் திசையுணர்ந்து அமைத்துள்ளார். இவர் அமைத்த முறையின் அடிப்படையிலே இன்றுவரை நவக்கிரகங்களின் திசையிருப்பு உள்ளது. போகரை தமது குருவாகக் கொண்டவர். உலகமே பஞ்சத்தால் அவதிப்பட்டபொழுது இவரும் இவரது கால்நடைகளும் பசியின்றி வாழ்ந்தனர். இதனைக் கண்டு வியந்த நவகோள்களும் இவரிடம் வர அவர்களை உபசரித்து வேண்டிய திசையில் அமைக்கிறார்.

உடம்பினையும், உள்ளத்தையும் உயிரையும் ஆராய்ந்து பல நுட்பமான அற்புத இரகசியங்களை தமிழகத்தின் சித்தர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். சித்தத்தை சுத்தமாக்கல் மன அடக்கத்திலே உள்ளது என்பதை இடைக்காட்டுச் சித்தர் எடுத்துரைத்துள்ளார். சிவகதி நேருமிடத்தில் பற்றுக்கள் நீங்கும் என்பதை சித்தர் உணர்த்துகிறார். பற்றற்ற நிலையே சித்தி அடையும் முறையாக உள்ளது. பசு, மாடு, பாம்பு, தும்பி, மயில், அன்னம் என்பன போன்ற சொற்கள் இடைக்காட்டுச் சித்தரின் பாடல்களில் அமையப் பெற்றுள்ளதைக் காண முடிகிறது. மக்களுக்கு நடைமுறைபடுத்தக் கூடிய அளவிற்கு அவர்களின் பயன்பாட்டு வாழ்வியல் சொற்களைக் கொண்டே சித்தியடையும் முறையை சித்தர் கூறியிருப்பது சிறப்பானது. பசு, மாடு, தும்பி என்ற சொற்களினூடாக ஆழ்ந்த சித்த சூட்சுமத்தையே இடைக்காட்டுச்சித்தர் பொதிந்து வைத்துள்ளார். சித்தர் கோட்பாடு மனித வாழ்வியலை மேம்படுத்துவதை இவ்வாய்வு சமூகவியல் அணுகுமுறையில் எடுத்துரைக்கிறது.

**கருச்சொற்கள்**

மனசுத்தி, அண்டம், நவகோள்கள், சிவதாண்டவம், தாண்டவக் கோனே, சிவகதி, பேரின்பம்.

**முன்னுரை**

சித்தத்தை அடக்குபவர்கள், ஆள்பவர்கள் சித்தர்கள். பஞ்சபூத கட்டுப்பாடுகளை கண்ணசைவிலே செய்பவர்கள். உடம்பினை கோவிலாக்கி உள்ளத்தை இறையாக்கி

இறையோடு பரிபூரணமாகும் தத்துவத்தைக் கொண்டவர்கள். அதற்கே இவ்உலக வாழ்க்கை பயன்படவேண்டும் என முழுமையாகக் கருதியவர்கள். ஆன்மீகத்தோடு இணைந்த அறிவியலைத் தந்தவர்கள். கோடான கோடி சித்தர்களில் இடைக்காட்டுச் சித்தர் பெறுமிடம் அவரின் சிவநெறிக் கோட்பாடுகளை சமூகவியல் அணுகுமுறையில் இக்கட்டுரை தர விழைகிறது.

**இடைக்காட்டுச் சித்தரின் இறைமை வாழ்வியல்**

இவர் பிறப்பிடம் மற்றும் ஜீவசமாதி பற்றி பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருப்பினும் இவர் நவக்கோள்களை திசை மாற்றிய இடம், இடைக்காட்டூர் என்பது மறுக்க முடியா உண்மையாகும். இவரின் பெயராலே இவ்வூர் அறியப்படுகிறது.

காடர் என்பதே இவரின் இயற்பெயராகும். இடையர் குலத்தில் பிறந்தவர் என்பதால் இடைக்காடர் எனப்பட்டார். இடையர்கள் முல்லை நில மக்களாக அறியப்படுபவர்கள். ஆநிரை மேய்த்தலே அவர்களின் தொழிலாகும். ஆநிரை மேய்ப்பதோடு இடையிடையே தவத்திலும் காடர் ஈடுபடலானார். வான் வழியே சென்ற போகர் இவரின் தவம் கண்டு நேரில் தோன்றினார். போகரை ஆட்டுப்பால் தந்து உபசரித்தார் இடைக்காடர். அவர் உபசரிப்பில் மகிழ்ந்த போகர் எதிர்காலத்திற்கும் பயன்படும் வகையில் தனது சித்துக்களை இடைக்காடருக்கு உபதேசம் செய்து அருளினார். மக்களுக்கு பயன்படும் வகையில் நூற்களை எழுதக் கூறினார். அதனால் இடைக்காடர் இடைக்காட்டுச் சித்தராகினார். போகரின் அருளாசியோடு ஞானசூத்திரம் முதல் சித்தர் சரீரம் போன்ற நூற்களை படைத்து உள்ளார். மனித வாழ்வியலின் அனைத்து வினாக்களுக்குமான விடைகள் இடைக்காட்டுச் சித்தரின் நூற்களில் உள்ளன.

உடம்பினையும் உள்ளத்தையும் உயிரையும் ஆராய்ந்து பல நுட்பமான அற்புத இரகசியங்களை தமிழகத்தின் சித்தர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். மன தத்துவ அறிவியல் பேருண்மைகளைத் தந்தவர்கள் சித்தர்கள்.'[1] மானுட வாழ்வின் நோக்கம் இறையோடு கலத்தல், இறை மயமாதலே ஆகும். அதனை தமது பாடல்களில் தெளிவுற விளக்கியுள்ளார். சைவநெறி, வைணவநெறி இரண்டினையும் குறித்தான சொல்லாடல்களாக தாண்டவக் கோனே, நாராயணக் கோனே என்ற பெயர்களைக் குறிப்பிடுகின்றார்.

தாண்டவம் - சிவதாண்டவத்தைக் குறிப்பதாகும். நாராயணன் - பெருமாளளைக் குறிப்பதாகும். தமிழகத்தில் இடைக்காலம் வரை சிவநெறியும் வைணவநெறியும் ஒருங்கே தான் பின்பற்றப்பட்டுள்ளது. ஒரே கோயிலில் சிவசன்னதியும் திருமால் சன்னதியும் உள்ள கோயில்கள் பலவற்றைக் காணலாம். திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், திருச்சி உத்தமர் கோவில் போன்றவை. சங்கர நாராயணன் என்ற திருநாமமும் சைவ வைணவ நெறிகளின் இணைப்பையே காட்டுகின்றன. இத்தகைய சூழல் மாறி சைவ நெறியும் வைணவ நெறியும் மாறுபட்டு நின்ற காலம் பிற்காலமாகும். இடைக்காட்டுச் சித்தர் காலத்தில் சைவநெறியும், வைணவ நெறியும் ஒருங்கே பின்பற்றப்பட்டதை தாண்டவக் கோனே நாராயணக் கோனே என்ற சொல்லாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

**நவக்கோள்களின் திசையும் அமைவிடமும்**

நவக் கோள்கள் இராமாயண காலத்திற்கு பின்னரே வழிபாட்டிற்குரிய முறையில் கோயில்களில் இடம்பெறலாயின. சான்றாக தேவிபட்டினம் நவகற் தூண்கள் நவ கோள்களாக வழிபாடு செய்யப்படுகிறது. இராமாயண காலத்திற்கு முந்தைய கோவில்களில் நவகோள் வழிபாடு இல்லை என்பதற்கு உத்தரகோசமங்கை மங்களநாதர் கோயிலை சான்றாகக் கொள்ளலாம். கோள்களின் செயல்பாட்டிற்கு ஏற்பவே தனிமனித வாழ்விலும் சமூக வாழ்விலும் மாற்றங்கள் ஏற்படும் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.

தனது குழந்தை எல்லாச் சிறப்புடனும் பிறக்க வேண்டும் என்பதற்காக இராவணன் நவகோள்களையும் ஓரிடத்திலே சிறைப்பிடிக்கிறான். இராவணன் தனது அதிகார ஆணவ பலத்தால் நவகோள்களை சிறைபிடித்தான். ஆனால் நவ கோள்களும் தாமாகவே விரும்பி வந்து இருந்த இடமே இடைக்காட்டூர் ஆகும்.

அதற்குக் காரணம் இடைக்காடரின் தவவலிமையும் அறிவாற்றலுமே ஆகும். தனது யோக வலிமையால் கடுமையான பஞ்சம் வரப் போகிறது என்பதை உணர்ந்த இடைக்காடர் அதற்கான முன்னேற்பாடுகளை செய்தார். தனது ஆடுகளுக்கு சிறிது சிறிதாக எருக்கிலையை தின்னப் பழக்கினார். எருக்கின் செடியானது வறண்ட பூமியிலும் வளரக் கூடியது. கடும் பஞ்சம் ஏற்பட்டாலும் இடைக்காடரின் ஆடுகள் எருக்கன் இலைகளைத் தின்று உயிர் பிழைத்துக் கொள்ளும் தன்மை அடைந்தன.

தனது உணவிற்காக பணிவரகினை மண்ணோடு கலந்து தனது குடிலின் மண்சுவரை எழுப்பினார். தானியக் குடிலாயிற்று இடைக்காட்டுச் சித்தரின் வசிப்பிடம். உலகமே கடும் பஞ்சத்தால் இன்னலுற்ற போது சித்தரும் அவரது ஆடுகளும் பசியின்றி வாழ்வதைக் கண்டு வியந்த நவகோள்களும் அவரின் இருப்பிடம் வந்தன. சித்தரின் இயல்பான வாழ்வினை கண்டு வியந்த நவகோள்களையும் இடைக்காடர் உபசரித்தார். மண்சுவற்றின் வரகரிசியை அமுதாக்கி ஆட்டுப்பாலோடு கலந்து நவகோள்களுக்கும் அமுது படைத்தார். பாலமுது உண்ட நவகோள்களும் அவ்விடத்திலே உறங்கலாயின. அச்சூழலில் எக்கோள் எந்த திசையில் இருந்தால் பிரபஞ்சத்திற்கு நன்மை என உணர்ந்த இடைக்காட்டுச்சித்தர் அவ்வண்ணமே அவைகளை திசைமாற்றி அமைத்தார். நவகோள் திசை மாற்றத்தால் பிரபஞ்சத்தின் கடும் பஞ்சம் விலகி பெருமழை பொழிந்தது.

உறக்கம் நீங்கி எழுந்த நவ கோள்களும் உலகின் மாற்றம் கண்டு வியந்தன. உலகின் நன்மைக்காக இவ்விதம் செய்த இடைக்காடரின் சமூக நலன் போற்றி சித்தர் அமைத்த திசையிலே இருக்க சித்தம் கொண்டனர். சித்தர் வாழ்ந்த இடத்தில் நவக் கோள்களின் கோயில் உள்ளது. இன்றும் மக்கள் வழிபாடு செய்கின்றனர். மக்கள் அருள் வாழ்வு மலர ஞான சித்தி பெற யோக சக்தி தரும் மகா சித்தராக இடைக்காட்டுச் சித்தர் இன்றும் வாழ்கின்றார்.

**சித்தத்தை சுத்தமாக்கல்**

தாண்டவக் கோனே என்ற வரியோடு இவரின் பாடல்களில் குறிப்பிடப்படும் தாண்டவம் சிவதாண்டவம் ஆகும். சிவனையே இவ்விதம் குறிப்பிடுகிறார். ஐம்புலன்களின் அடக்கமே இறையை அடைய உதவுகிறது. மனம், சினம். ஆசை அடக்கத்தினை முறையே மாடு, பாம்பு,

பசு என உருவகம் செய்கிறார். மன அடக்கமே சித்தத்தை சுத்தமாக்கும். சித்தம் என்றால் அறிவு என்றும் சித்தர்கள் என்றால் அறிஞர்கள் என்றும் பொருள்படும்.'[2] அறிவின் வெளிப்பாடு அடக்கமாகும். அறிவோடு செயலாற்றும் போது அனைத்தும் கைவசமாகும்.

சித்தருக்கு எல்லாம் சித்தராக சிவனாரே அறியப்படுகிறார். மதுரையம்பதியில் சித்தராக காட்சியளிப்பதை இன்றும் காண முடிகிறது. சிவகதி நேருமிடத்தில் பற்றுக்கள் நீங்கும்.

காடும் யானைகளும் மக்களும் சுற்றமும் வான் பொருளும்
வீடும் மணிகளும் வெண் பொன்னுஞ் செம்பொன்னும் வெண்கலமும்
காடும் கரைகளும் கல்லாப் பணியும் கரிபரியும்
தேடும் பல பண்டம் நில்லா சிவகதி நேர்மின்களே (பா.23)

சிவகதி நேருமிடத்தில் பற்றுக்கள் நீங்கும் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. மனித வாழ்வு நீறாகிப் போவதையே திருநீறு உணர்த்துகிறது. திருநீரே பலபிணிகளுக்கு மருந்தாகிறது என்பதை திருஞான சம்பந்தரின் திருநீற்றுப் பதிகம் எடுத்துரைக்கிறது. தமிழர்களின் நாகரிகம் பண்பாடு இசை, ஞானம் ஆகியவற்றின் ஒட்டு மொத்தமான கலவையின் வெளிப்பாடுகள் இந்த சித்த மருத்துவமாகும்.'[3] சித்த மருத்துவம் இறை வழிபாட்டின் ஒரு வழிமுறையாகும். உடல் சுத்தியோடு மன சுத்தியோடு ஏற்கப்படும் மருத்துவம் நன்மை பயக்கிறது. சிவனே வைத்தீஸ்வராகவும் தாயுமானவராகி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். உடல் நலம் போலவே உள்ளத்து நலமும் அவசியமாகிறது.

சிவசிவ என்றிலா தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவார்
சிவசிவ என்னச் சிவகதிதானே'

என்ற திருமந்திரப்பாடலை 12 முறை கூறினால் 108 முறை ;சிவ சிவ' என்ற மந்திரம் கூறியதற்குச் சமமாகும். அந்தளவிற்கு சொற்கட்டும், பொருட்கட்டும் உடையனவாக சித்தர் இலக்கியங்கள் விளங்கியுள்ளன. 'எண்ணற்ற சித்தர்கள் இருந்து வந்த போதிலும் அவர்களுடைய பயிற்சி முறை என்பது ஒரே தன்மையத்து என்பது ஒரு சுவையான உண்மை.'[4] இதனால் தான் சிவகதி அடையும் சித்தி அருளுவதில் திருமூலரும், இடைக்காட்டுச் சித்தரும் இணைந்தே கருத்துரை தந்துள்ளமையைக் காண முடிகிறது. உடம்பினையும் உள்ளத்தையும் உயிரையும் ஆராய்ந்து பல நுட்பமான அற்புத இரகசியங்களை தமிழகத்தின் சித்தர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள்.'[5]

கண்ணுள் கருமணியைக் கற்பகத்தைக் காஞ்சனத்தைப்
பெண்ணுருவப் பாதியினைப் பேசரிய முப்பொருளை
விண்ணின் அமுதை விளக்கொளியை வெங்கதிரைத்
தண்ணளியை யுள்ளில் வைத்துச் சாரூபஞ் சாருவனே(பாடல் 12)

என்ற பாடலில் சிவத்தின் பேரின்ப அருளை இடைக்காட்டுச் சித்தர் போற்றுகிறார்.

கண்ணிற்கு ஒளியாவது உடம்பின் உயிராவது கன்னின் கருமணியே ஆகும். கருமணி சிவமணியாகும். கற்பகத்தை, காஞ்சனத்தை என்ற சொல்லாட்சிகள் இறைவனை காட்சிப்படுத்துகின்றன. கேட்பதை எல்லாம் தரவல்லது கற்பகம். அடியவர் அன்போடு கேட்கும் யாவற்றையும் தரவல்லவராக இறைவன் உள்ளதால் தான் கற்பகத்தை காட்சிப்படுத்துகிறார். பொன்னார் மேனியனே என்று சுந்தரர் பாடியது போல இடைக்காடரும் ‘காஞ்சனமே’ என என்று இறைவனை விளிக்கிறார். உமையொரு பாகமாக கொண்டவர்: பதி, பசு, பாசம் என்பதையே பேசரிய முப்பொருளாக முன் வைக்கிறார். ஆலகால வி~த்தினை உண்டு நமக்கு அமுதம் தந்தவர். சிவன் என்பதால் அவரையே ‘விண்ணின் அமுதாக’ விவரிக்கிறார். சித்தர் தத்துவத்தின் இலக்கிய வடிவாகச் சித்தர் பாடல்களைக் கொள்ள வேண்டும்.’[6] சித்தர் பாடல்களில் மனமானது பல்வேறு உவமைகளோடு இணைத்துக் காட்டப்படுகிறது.

**சித்தி அடையும் முறைகள்**

மனித இனம் சித்தியடையவே சித்தர்கள் விரும்பினர். சித்தர்கள் பாடிய பாடல்களின் மொழி, பாடலமைப்பு, இலக்கணம் இவையெல்லாம் வெவ்வேறாக இருப்பினும் அவர்களின் நோக்கம் எப்போதும் மக்களின் வாழ்வினை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்வது தான்.’[7] பற்றற நின்றதை நெஞ்சத்தில் இருத்தி இரவும் பகலும் நேசத்தோடு கூடினால் அதுவே சித்திக்கான வழியாகும்.

மனமென்னும் மாட்டடங்கிற் றாண்டவக் கோனே
வாய்த்ததென் றெண்ணேடா தாண்டவக் கோனே (பாடல் 13)
சினமென்னும் பாம்பிறந்தாற் தாண்டவக் கோனே
சித்தியென்றே நினையேடா தாண்டவக் கோனே (பாடல் 14)
ஆசையெனும் பசுமாளின் தாண்டவக் கோனே
அண்டமெல்லாங் கண்டறிவார் தாண்டவக் கோனே (பாடல் 15)

என்ற எளிய பாடல்களில் மாடு. பாம்பு, பசு என்ற உருவகங்களின் வாயிலாக சிவத்தை சித்திக்கும் வழிமுறைகளை சித்தர் கூறுகிறார். பதி, பசு, பாசம் என்பது சைவ சித்தாந்த கோட்பாடு இங்கே மனதை மாடு என்கிறார். மனதில் விளைவதே ஆசை அதை பசு என்கிறார். இவையிரண்டையும் ஆள நினைப்பதில் ஏற்படும் போராட்டமே சினத்தை தருகிறது. அந்த மாயக் கவர்ச்சியை பாம்பு என்கிறார்.

அகிலத்தை அடையவே அனைவரும் ஆசைப்படுவார்கள் ஆனால் ஆசையைத் துறந்தால் அகிலம் கிட்டும் என்பதே சித்தர் வாக்கு. பற்றற்ற நிலையே சித்தி அடையும் முறையாக இடைக்காட்டுச் சித்தர் பகருகிறார்.

பற்றே பிறப்புண்டார்க்குந் தாண்டவக் கோனே அதைப்
பற்றா தறுத்து விடு தாண்டவக் கோனே (பாடல் 19)

என்பதில் சித்தர் பற்றற்ற நிலையே பிறவின் பெருங்கடலை நீந்த உதவுவது. புறவா பேரின்பத்தை தருவது என்கிறார். இதனையே மாணிக்கவாசகரும் 'எல்லாப் பிறப்பும் பிறந்து இருந்தேன் இனி பிறவாமல் இருக்க வேண்டும் என்கிறார்.

'மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்'

ஏன முக்தியடையும் முறையையும் வாதவூரார் காட்டுகிறார். காரைக்கால் அம்மையாரும், பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உம்மை மறவாமை வேண்டும் என்கிறார். பிறவாமையே சித்திக்கும் மனித முக்திக்கும் வழிவகுப்பதாகும்.

ஆதி பகவனையே பசுவே

சோதி பரகதிதான் சொந்தம் ஆகாதோ பசுவே'[8]

என்பதில் ஆதிபகவானை அன்பால் நினைத்தால் சோதிமயமாகலாம் என்பதே சித்தர் வாக்கு. இதனையே வள்ளலாரும் 'அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை என்கிறார். இறை சோதியில் இரண்டற கலக்க குண்டலி சக்தி உந்தப்பட வேண்டும். மனித ஆற்றல் முழுமையாக வெளிப்பட வேண்டும். அதுவே யோக சக்தியாகிறது. வாழ்வின் தவமாகிறது. 'சித்தர் இலக்கியத்தில் காண்கின்ற அத்தனை அறிவியலும் பொது மக்களிடம் தமிழ்ச் சமூகத்தில் பரவி வேரூன்றி அதுவே நமது மொழியிலும் அன்றாடத் தமிழ் வழக்கிலும் நம்முடைய தமிழ் இலக்கணத்திலும் நிலைத்து நிற்கிறது.'[9]

மகடூஉவை முன்னிறுத்தி பல பாடல்கள் தமிழில் உள்ளன. எ.கா யாப்பருங்கலக்காரிகை அதுபோல இடைக்காட்டுச் சித்தர் தமது இயற்கை வாழ்வியலில் தம்மோடு உறவாடிய உயிரினங்களை முன்னிறுத்தியே பாடல்களைப் பாடியுள்ளார். பசு. மாடு, பாம்பு, தும்பி, மயில், அன்னம் என்பன போன்ற சொற்கள் இடைக்காட்டுச் சித்தரின் பாடல்களில் அமையப் பெற்றுள்ளதைக் காண முடிகிறது. மக்களுக்கு நடைமுறைபடுத்தக்கூடிய அளவிற்கு அவர்களின் பயன்பாட்டு வாழ்வியல் சொற்களைக் கொண்டே சித்தியடையும் முறையை இடைக்காட்டுச் சித்தர் கூறியிருப்பது சிறப்பானது. பசு, மாடு. தும்பி என்ற சொற்களினூடாக ஆழ்ந்த சித்த சூட்சுமத்தையே இடைக்காட்டுச் சித்தர் பொதிந்து வைத்துள்ளார் என்று கூற முடிகிறது.

பொய்யான கல்வி கற்றுப் பொருண் மயக்கங் கொள்ளாமல்

மெய்யான ஞானக்கல்வி விரும்புவாய் தன்மனமே (பாடல் 61)

என தனது மனதோடு சித்தர் கிளர்க்கிறார். பொய்யான கல்வி உலகியல் வாழ்க்கைக்கு பொருள் சேர்க்கவே வேண்டும். ஆனால் மெய்யான கல்வி ஞானமாகும். சாகாக் கல்வியாகும் என்பதை மனதோடு கிளத்தல் பகுதியில் சித்தர் வலியுறுத்தியுள்ளார்.

சாவா திருந்திடப் பால்கற – சிரம்
தன்னிலிருந்திடும் பால்கற
வேவா திருந்திடப் பால்கற வெறு

வெட்ட வெளிக்குள்ளே பால்கற (பாடல் 107)
நாறா திருந்திடும் பால்கற – நெடு
நாளுமிருந்திடப் பால்கற (பாடல் 109)

என்பதில் பால்கற என்பது மனித குண்டலிசக்தியை குறிக்கிறது. மூலாதாரத்து மீண்டெழும் கனலே மேல் நோக்கி எழுந்து ஏழு சக்கரங்களை அற்றல் பெற வைக்கிறது. இதனால் சிரசின் சகஸ்ரகமலம் மலர்வதையே பால்கற என்பது குறிக்கிறது. அப்போது உடல் ஒளி வடிவாகிறது. ஆழியாத தன்மையுடையதாகிறது. ஆதியும் அந்தமும் இல்லா சோதியோடு கலக்கிறது. ஒளிமயமாகி விடுகிறது. பேரின்ப வாழ்வினை மனித இனத்திற்கு சித்தர் பாடல்கள் தருகின்றன.

**முடிவுரை**

மனிதர்களோடு வாழ்ந்த இறையின் பிரதிவடிவங்களாகவே சித்தர்கள் அருள் பாலித்துள்ளனர். இடைக்காட்டுச் சித்தர் வாழ்ந்த பூமியில் வாழ்வதே பெருமையானது. ஆசை துறந்து அகில நன்மைக்காக நவகோள்களையே திசை மாற்றும் சி;த்தி பெற்றவரின் சிந்தனை மனித இனத்தின் வாழ்க்கையே மாற்றும் சிவசக்தியடைய அனைத்து உயிர்களுக்கும் உதவும் என்பதை இவ்வாய்வு உறுதி செய்கிறது.

**சான்றெண் விளக்கம்**

1. மீ.ப சோமு. சித்தர் இலக்கியம் ப.41
2. தமிழ் (சித்த) மருத்துவக் கோட்பாடு ப.6
3. மேலது ப.41
4. மீ. ப சோமு. மேலது ப.38
5. மேலது ப.41
6. கோ. சுதிஸ் சித்தர் இலக்கியம் வெளிப்படுத்தும் தமிழ்ச்சமூகம் **4/2/2016 keetru.com**
7. இரா. கோகிலவாணி சித்தர் இலக்கியங்களில் கார்த்திகேயன் உலக சிந்தனைகள் பிரவை தமிழ் மின்னியல் ஆய்விதழ், சென்னை **Vol-Issue3-oct 2022**
8. மீ.ப. சோமு மேலது ப.108
9. மு. நாகராசன் சித்தர்கள் காட்டும் வாழ்வியல் முறைகள் மலர்- 3 இதழ் - 1 2013

**பயன்பட்ட நூற்கள்**


1. சோமு. மீ. ப — சித்தர் இலக்கியம், அண்ணாமலை பல்கலைக்கழக வெளியீடு, அண்ணாமலை நகர் - 2, முதற் பதிப்பு 2009
2. தமிழ் (சித்த) மருத்துவக் கோட்பாடு — இந்திய மருத்துவம் ஓமியோபதித்துறை, சென்னை – 6, முதற் பதிப்பு 1995.